அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2022/2023

## தமிழ் - ஆண்டு 12

பெயர்:

## புலன்மொழித் தேர்வு

### கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்

### அ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✕ எனவும் அடையாளமிடுக.**

1. ஓரினத்தின் மரபு என்பதனுள் பழக்கவழக்கங்களும் அடங்கும். ☐
2. தமது நிலங்களிலேயே நிலையாக வாழ்கின்ற மக்களினம் தமது மரபுகளை இயல்பாகவே பேணிவருவர். ☐
3. தமிழர்கள் நீண்ட மரபுவழிப் பண்பாடுகளைக் கொண்டவர்கள். ☐
4. புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளில் மட்டும் வாழ்கிறார்கள். ☐
5. தமிழர் அடுத்த தலைமுறைகளுக்குத் தமது அடையாளங்களைக் கடத்துகின்றனர். ☐
6. பல்லினப் பண்பாட்டுக் கொள்கையுடைய நாடுகளில் தமிழர் தமக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனர். ☐
7. கனடா அரசு தைத்திங்களைத் தமிழரது மரபுரிமைத் திங்களாக அறிவித்துள்ளது. ☐
8. தமிழர் வரலாறு, பண்பாடுகளைப் பிற இன மக்கள் தெரிந்து வியப்படைகின்றனர். ☐

(8 x ½ = 4 புள்ளிகள்)

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்பெறும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக்கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நிறைகுடம் தமிழரது எந்த நிகழ்வுகள் நடைபெறும் இடங்களில் முதன்மை பெற்றிருக்கும்?

2. நிறைகுடத்திற்கு உள்ள ஆற்றலாகக் கூறப்பட்டது எது?

3. நிறைகுடம் வைப்பதற்குத் தேவையான பொருள்கள் இரண்டினை எழுதுக.

4. நிறைகுடத்தில் பரப்பப்படும் நெல் அல்லது அரிசி எதனைக் குறிக்கிறது?

5. நிறைகுடத்தில் ஐம்புலன்களையும் குறிப்பதாக இருப்பவை எவை?

6. எமது முன்னோர் எந்தத் தொழிலுக்கு முதன்மை கொடுத்து வாழ்ந்தனர்?

**(6 x 1 = 6 புள்ளிகள்)**